

# யூசிஎஸ்ஐ பல்கலைக்கழகத்தின் கலை வடிவமைப்புக் கண்காட்சி



(காளிதாசன் தியாகராஜன் - கி.தீபன்)

செராஸ், ஏப். 22- வரும் ஜூன் மாதம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலக கிண்ண கால் பந்துப் போட்டியை முன்னிட்டு செராஸில் அமைந்துள்ள யூசிஎஸ்ஐ பல்கலைக்கழக மாணவர்கள் கலை வடிவமைப்பு கண்காட்சியை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த கண்காட்சிக்கான அலங்காரப் பொருட்களை பல்கலைக்கழக மாணவர்கள் தயாரித்திருந்தனர். கால்பந்தை முதன்மையாக கொண்டு அவர்களின் படைப்புகள் அமைந்திருந்தன. மேலும் சில மாணவர்கள் உலக கிண்ண கால்பந்து போட்டியை முன்னிட்டு உலக நாடுகள் ரீதியில் உடைகளை வடிவமைத்திருந்தனர். இந்த கால்பந்து போட்டியில் பங்கு கொள்ளும் உலக நாடுகளின் தேசிய கொடியின் வடிவமைப்பையும் வண்ணங்களையும் கொண்டு இந்த அலங்கார பொருட்கள் தயாரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்த கண்காட்சியை மலேசியாவிற்கான ரஷ்யா நாட்டு தூதர் வெலேரி என். யெர்மோலோவ் திறந்து வைத்தார். அவருடன் ரஷ்ய தூதரகத்தின் கலைத் துறை ஆலோசகர் டாக்டர் அய்ராட் அக்மேத்தோவ், தூதரின் ஊடகச் செயலாளர் மெக்ஸிம் சல்னிக்கோவ், யூசிஎஸ்ஐ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் டத்தோ டாக்டர் அகமட் ஹாஜி ஜைனுடின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கால்பந்தை கொண்டு வடிவமைத்தல், உடை வடிவமைப்பு ஆகிய இரு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.